# கோராவில் கவிதைகள்!..... கவிஞர் கவிவளவன்

## மூக்கு! 30-08-2020

நம் முகத்தின் முகவரியை முத்தாய்ச் சொல்வது!
நம் இருப்பை அறிய எளிதில் வகை செய்வது!
நம் நாவுக்கும் சுவையை நலம்பட உரைப்பது!
நம் தேவையற்றச் செயலில் திட்டும் வாங்குவது!
நம் மூப்பில் கண்களின் அணியைக் காத்து நிறைவது!
நம் ஏக்கமும் துக்கமும் எளிதில் சொல்வது!
நம் இடகலைப் பிங்கலைச் சுழிமுனை யாவது!
நம் வாழ்வைக் கூட்டும் வழிமுறை செய்வது!
[கோராவில் ஒருவர் மூக்கைப் பற்றிய கவிதைக் கேட்டார், அதற்காக எழுதியது]

கோரா வை ஒரு பெண்ணாக வருணித்து கவிதை ஒன்று எழுத முடியுமா?

சொல்லும் அழகும் சுவைசேர்ந்த மொழியும்,
ஒல்லும் வகையாய் உயர்வினைச் சொல்லும்!
அல்லல் மொழியாய் பலப்பல நெய்தேசிலர்;
தொல்லை தந்தேத் தொய்வினைச் செய்வர்!
பொல்லா பெருமைகள் அள்ளியே தெளித்து,
நல்லவர் மனமும் தளர்ந்திடச் செய்யினும்;
மல்லைச் சிற்பமாய் மருவின்றி நிறையும்,
மெல்லியல் எங்களின் கோராச் செல்வியாள்!
நல்லவர் மனமாய் நலமுடன் என்றும் வாழ்கவே!
*கவிவளவன்* 15-12-2020

'அவா' என்ற தலைப்பில் அழகு கவிதையொன்று என் தொடுதிரை தோழமை எழுதிடுமா?

**அவா!**

அவா வாழ்வின் அவலம் என்றான் புத்தர் பிரான்!
அவா வாழ்வின் அறனாய் நிற்றலும் இயலே!
அவாவெகுளி யாவும் இழுக்கென்பது வள்ளுவம்!
அவாவென்பது அளவாய் நிற்றலே சிறப்பாகும்!
அவாவென்பது அளவோடாயின் மனமும் நிறையும்!
அவாவென்பதும் ஒருதேவையின் தேடல்தான்!
அவா வென்பது உயிர்வாழ என்றால் உன்னதமே!
அவாவென்பது அனைத்து உயிரிலும் அளவோடாக,
அவாவினால் அல்லல் உறுவது மானிடமே!
19-12-2020 2.20 PM

## பெண் குழந்தைகள் தினம்!
தன்னைச் சுமந்த கரங்கள்;
இயன்நிலை வாழ்வின்,
அறிவைச் சொல்லும்!

தன்கரம் பற்றிய;
மகளின் மனத்தால்,
தங்கச் சுரங்கமாய்,
அறிவை செய்யும்!

மகனோ, மகளோ
,தன்கரம் ஈந்த,
பெண் குழவி தன்னால்,
மண்ணகம் போற்றிய,
மாண்புகள் தெரிய,
சிவிகையால் உள்ளம்,
சிரித்தே மகிழ்ந்திடும்!
**-- கவிவளவன் 11-10-2020**

நீங்கள் எழுதிய தமிழ் கவிதையை அல்லது படித்து வியந்த கவிதையை பகிர முடியுமா?
## நுண்கிருமி!
மனிதன்,
வீட்டுக்குள் அடங்க,
கிரீச் சிட்டன புள்ளியங்கள்!
விலங்குகள்,
முழு சுதந்தினத்துடன்,
உலாவுகின்றன
**கவிவளவன் 12-05-2020**

## மனக் கூடு!
கனவுகளில், ஆயிரம்,
காட்சிகளில் நூறு,
நெஞ்சம் மறந்த.
நிஜத்தின் நிறங்களில்,
இன்னும் சிலவாய் தோன்றும்!
இயற்கையே கடவுளென்று,
இயம்பினோம் நாமே என்றால்;
ஏற்பார்தான் எவரும் உண்டோ?
செயற்கையாய் சிலைகள் செய்து,
சிலாகித்து வாழும் போதும்;
சிந்தையில் ஒருமை வேண்டும்!
சிறுமையில்லா சிந்தை வேண்டும்!!
**கவிவளவன் - 23-07-2020 (10 PM)**

## இறைவனே உனைத்தான்!

இடர்களை நீக்கு, இன்னலை நீக்கு,
எழுந்திடும் மனத்தில், இயன்நிலை கூட்டு!
கனவோ மனத்தின், கற்பனைத் தேரோ!
எதுவோ அதுவோ இதுவே அதுவே
ஆன்ற மனத்தின் அல்லல் நீக்கிடு!
தேடா கல்வியும் கூடா செல்வமும்,
இன்னல் தந்து இயன்நிலை மாற்றும்!
பொல்லா மனத்தில் புதுவழி தேடு,
அல்லல் நீக்கிய ஆன்ற கலமாய்,
வாழ்வைச் செய்து, வளமொடு வாழ்க!

- **கவிவளவன் 24-07-2020 (11.20 PM)**

## காதல் வேண்டும்!

உணர்ச்சியின் உன்னதம்;
கவிதைகளாக, கால்முளைத்து வளரும்!
நோக்கலில் வளரும் காதல் - அது,
பூக்களின் மீதும் விரியும் பூவையர் மீதும் விரியும்.
காதல் ஒன்றே வாழ்வை நகர்த்தும்,
இறைவனின் தூதுவன்.
அன்னையில் காதலால் அமுதம் அணைக்கும்,
தங்கையின் காதல் நட்பில் நிறையும்!
தமக்கையின் காதல் அன்பைப் பொழிய,
தம்பியின் காதல் தோள்களை அணைக்க,
தமையனின் காதல், தாள்களைத் தாங்கும்!
தந்தையின் காதலே அறிவைச் செய்திடும்!
துணையின் காதல் வாழ்வினைச் சீராக்க,
நண்பரின் காதல் அரங்கில் ஏற்றும்!

**-கவிவளவன்** 24-07-2020 (11.40 PM)

## மரணம்!

ஒவ்வொரு மனிதனையும்,
தேடாத போதும் தேடிவருவது!
வாழ்வின் முகவரியை,
அறியச் செய்வது!
சுமந்த கனவுகளின்,
முடிவுரை யாவது!
வேல்விழி யழகும்,
தோள்வலி நலனும்,
தொலைந்து போகும்,
காலக் கணக்கு!

**கவிவளவன்** 06-08-2020 (7.15 AM)

ஆதவனையும், ஆணையும் ஒப்பிட்டு கவிதை எழுத முடியுமா?
ஒளியாய் நிறைந்து உலகை ஆள்பவன் ஆதவன்!
ஒவ்வொரு உயிரிலும் உணர்ந்து நிறைபவன்!
செவ்விய உயிர்கள் அனைத்திலும் ஆண்மை யுண்டு!
ஆண்மை என்பது ஆளப் பிறந்ததாய்க் கூறுவர்!
பெண்மையில் பிறந்த துளி என்றே அறிவியல் கூறும்!
உண்மையில் மானுடப் பரல்களின் உயிர்நிலை அளிக்கும்!
தண்மையால் ஆண்மைக்கோர் தகுதியும் உண்டு!
பெண்மையும் அங்கே யாவிலும் பின்புலம் ஆகும்!
வெண்மையே ஒளியே உலகம் உய்ய ஆதவனாய்,
மண்ணில் நிறைந்து மக்களையும் காக்கும்!
17–05–2021

கவிதை என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுத முடியுமா?
கவினாகத் தைத்தலாலே கவிதையென்போம்!
புவியாண்ட மன்னர்க்கு இணையாக மண்ணில்
கவியாண்ட மன்னர் தாமிருந்தார் அந்நநாள்!
செவியுண்டக் கனிகளாய் வாழுமாம் கவிதை!
தவிக்கின்ற மனச்சோர்வையும் போக்குமாம்!
புவிதன்னில் பலகாலம் பழகிய மொழிவடிவம்!
கவியென்றால் குரங்கென்போம்! மனம்சூடும்
தவிப்பினைச் சீராக்கி தருதலால் கவிதையாமோ!
17–05–2021 (11.45PM)

நீயே என் சுவாசக்காற்றுஎனும் தலைப்பில் பத்து சொற்களுக்குள் கவிதை எழுத " முடியுமா?
கொத்தாகச் சிந்தையதைக் கொஞ்சும் பாவாக்க,
சித்தத்தில் எழுகின்ற தமிழே நீயே என் சுவாசக் காற்று! 19-08-2021 (2.50 PM)

உங்களால் எழுதப்பட்ட கவிதைகளை பகிர முடியுமா?

**கனவுகள் பூக்கும்!**

கவிதை வேண்டுமென்று இக்களத்தில் கேட்டீர் அன்றோ!
புவியிதன் புதுமைபோலே பூத்தது கவிதை தானும்!
போயின துன்பம் என்றே துவளாமல் நினைத்திடுவோம்!
காவியக் காலம் போலே கவிந்திடும் இன்பம் யாவும்!

மாவிலைத் தோரணம் மடல்திறந்த வாழை யெனவாய்,
கூவிடும் சுற்றம் சூழ கொண்டாடும் திருவிழாவோ?
புவிமீதில் ஆடிய உயிர்க்கொல்லி சென்றதுவோ!
மேவிய வெள்ளமாய் மண்மணம் பூத்ததுவோ!

தாவிய துன்பம்கள் தளமின்றி போயிடுமே!

மேவிடும் காலங்கள் மேண்மையாய் ஆயிடுமே!
தேடிடும் அறிவால் தினமும் தேவைகள் அறிந்திடுவோம்!
நாடியே அவரவர் வழியில் இறைவனை வேண்டிடுவோம்!
- **கவிவளவன்** 24-11-2021 (9.45 பி.எம்.)

தந்தை பற்றி ஒரு கவிதை எழுத முடியுமா?

## தந்தை!

அறிவைச் செய்து ஆற்றலை வளர்த்தவர்!
இயன்நிலை சொல்லி ஈடின்றி வளர்த்தவர்!
உன்னத அறிவுக்கு ஊக்கம் இட்டவர்!
எளிமையைக் கூறி ஏற்றம் செய்தவர்!
ஐயம் அகற்றிய அறிவுக்கண் ஆசான்!
ஒல்லும் அறிவை ஓயாமல் தந்தவர்!
ஔவை மொழிபோல் ஆக்கம் தந்தவர்! 01-02-2022

மெய்யும் பொய்யும்' என்ற தலைப்பில் அழகு கவிதை ஒன்றை என் தொடுதிரை தோழமை எழுதிடுமா?

## மெய்யும் பொய்யும்

பொய்யும் மெய்யும் வேறில்லை!
பொலிந்த அறிவின் பாதையிலே!
போலி அன்பில் பொய் நிறையும்!
புகழும் சொல்லிலும் பொய்நிறையும்!

அகற்றும் அறிவை மனம் கொண்டால்,
அனுபவம் யாவும் மெய்யாகும்!
மனமும் கலனாய் திகழ்ந்திட்டால்,
மெய்யாய் அனைத்தும் அறிந்திடவே,

மென்மை கொண்டு மனம் எழும்பும்!
அன்பே மெய்யின் அச்சாணி!
அறிந்திடில் என்றுமே நிறைவாகும்!
செறிவாய் மனத்தை செய்திட்டால்,

பொய்யே மெய்யை உணர்த்திடுமோர்,
பொலிந்த அறிவை மனம் பெறுமே!
வலியச் செய்தலில் போலியுண்டு!
வகுத்துச் செய்தலெ அறமாகும்!

காலை இரவுமாய் பொழுதாக,
மெய்யும் பொய்யுமாய் உறவுகளே!
மெல்லியக் கோடே அறிவின்நிலை!
அல்லவை நீக்கி வாழ்ந்திடுவோம்!

அறிவின் திறப்பைப் போற்றிடுவோம்!
தெளியும் கலன்கள் உண்மையாக,
தெரியும் மனத்தில் உரிய நிலை!
பொய்யின்றி என்றும் மெய்யிலையே!
- **கவிவளவன்** 12-03-2022

முந்தித் தவமிருந்து முன்னூறு நாள்சுமந்து,
தொந்திசரியக் காத்திருந்து பெற்றாளைச்
சிந்தாமல் சிதறாமல் போற்றிக் காத்தலே,
எந்திரமான வாழ்விலும் இயன்நிலை அறியீரோ!